**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 06.09.2018

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி மாதம் 21ஆம் நாள் **06.09.2018 வியாழக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆ1 நாள் 20.08.2018 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை ஆகியவற்றின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட குழு உறுப்பினர்களால் நகரில் பல்வேறு பகுதியில் உள்ள 1000 சதுரடி கொண்ட புதிய RCC கட்டிடங்களின் வாடகை மதிப்பு உத்தேசமாக அறியப்பட்டும், தேவையான கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டும் 01.04.2018 முதல் கீழ்கண்டவாறு திருத்திய அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து நடைமுறைப்படுத்த தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | 01.04.2008 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட மண்டலங்கள் / அடிப்படை மதிப்பு விபரம் | | 01.04.2018 முதல் நடைமுறைபடுத்தப் படவுள்ள மண்டலங்கள் / அடிப்படை மதிப்பு விபரம் | |
|---|---|---|---|---|
| | மண்டலம் | அடிப்படை மதிப்பு | மண்டலம் | அடிப்படை மதிப்பு |
| 1 | A | 1.25 | A | 1.50 |
| 2 | B | 0.85 | B | 1.10 |
| 3 | C | 0.65 | C | 0.85 |

**அலுவலகக்குறிப்பு** :

அ) மேற்கண்ட திருத்திய மண்டல அடிப்படை மதிப்பினை அனுமதிக்கலாம்.

ஆ) தற்போது நகரின் முக்கிய பகுதிகள் உள்ளடக்கிய தெருக்களை A Zone ஆகவும், அதற்கு அடுத்த பகுதிகளை கொண்ட தெருக்கள் B Zone ஆகவும், அதற்கு அடுத்த பின்தங்கிய பகுதிகளை கொண்ட தெருக்கள் C Zone ஆகவும், நிர்ணயம் செய்யப்பட்டது. புதிய மண்டல மதிப்பு மற்றும் இணைப்பில் கண்டுள்ள தெருக்கள் பட்டியல்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2567/2018/அ1)

**தீர்மான எண். 637 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் 02</u>:**

தேனி-அல்லிநகரம் நகராட்சி பகுதிகளில் உள்ள தெருமின்விளக்குகளை தற்போது துறையின் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்கண்ட தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின்சாதன பொருட்கள் தற்போது மிகவும் குறைவாக உள்ளதால் வருங்கால தேவைக்கு வாங்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதால் மேற்கண்ட மின்சாதன பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கிக்கொள்ள ஆகும் உத்தேசசெலவினம் ரூ.2,50,000/- (ரூபாய் இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3222/2017/இ2)

**<u>தீர்மான எண். 638 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 03</u>:**

தேனி – அல்லிநகரம் நகராட்சி 33 வார்டுகளில் உள்ள மின்விளக்குகள் தனியார் பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ் மற்றும் ஆங்கில நாளிழல்களில் மாநில அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | Accord advertising agencies, சென்னை (Deccan Chronicle மற்றும் மக்கள் குரல்) | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை. வெளியீட்டு ஆணை எண்: 2680/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2018 நாள்: 12-07-2018. | ரூ: 71,820/- |
| | | **மொத்தம்** | **ரூ: 71,820/-** |

மேற்கண்ட தொகை ரூ:71,820/- (ரூபாய்: எழுபத்து ஒன்று ஆயிரத்து என்னூற்று இருபது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1208 / 2018 /இ2)

**<u>தீர்மான எண். 639 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 04</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கான ஒப்பந்ததப்புள்ளி கோரியது தொடர்பாக KSP Electricals, தேனி நிறுவனத்தின் சார்பாக திரு.P.விஜயன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்: WP (MD) No. 17577 / 2018 தொடரப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு.க.ஹேமகாரத்திகேயன் வழக்கறஞர் ஆஜராகிடவும், மேற்கண்ட வழக்கு தொடர்பான செலவினங்களுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு.க.ஹேமகார்த்திகேயன் வழக்கறிஞர் ஆஜராகிட மன்றம் அனுமதிக்ககலாம்.

இ) மேற்கண்ட வழக்கு தொடர்பான செலவினங்களை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1208 / 2018 /இ2)

**<u>தீர்மான எண். 640 அ, ஆ மறறும் இ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 05</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் துப்புரவு பணியாளர் குடியிருப்பில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி, திண்டுக்கல். | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி கடிதம் எண்: 916 நாள்: 02-08-2018. | ரூ: 9,072/- |
| | | **மொத்தம்** | **ரூ: 9,072/-** |

மேற்கண்ட தொகை ரூ:9,072/- (ரூபாய்: ஒன்பது ஆயிரத்து எழுபத்து இரண்டு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.163 / 2018 /இ1)

**<u>தீர்மான எண். 641 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 06</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:25.00 லட்சம் (ரூபாய்: இருபத்து ஐந்து லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்பில் Water Supply specials arrangements மற்றும் Door Shutters பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்: 597 நாள்: 18-07-2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 20-08-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.C.நல்லகுரும்பன் அன் கோ, தேனி | ரூ:21,54,393.20 | ரூ:21,95,468.00 | 1.90% கூடுதல் |
| 2 | திரு.P.சிவசாமி | | ரூ:21,54,317.70 | 0.01% குறைவு |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு.P.சிவசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) துப்புரவு பணியாளர் குடியிருப்பு அமைக்கும் பணியினை விரைந்து முடித்து பயன்படுக்கு கொண்டு வரும் பொருட்டு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.232 / 2013 /இ1)

**<u>தீர்மான எண். 642 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:36.00 லட்சம் (ரூபாய்: முப்பத்து ஆறு லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி –அல்லிநகரம் நகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்பில் வெளிப்பக்க பூச்சு பணி, Weathering Course, Pressed Tiles, Rain Water pipe மற்றும் Water Closet அமைத்திட நகர்மன்ற தீர்மானம் எண்: 597 நாள்: 18-07-2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 20-08-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.C.நல்லகுரும்பன் அன் கோ, தேனி | ரூ:31,72,433.20 | ரூ:32,24,230.00 | 1.60% கூடுதல் |
| 2 | திரு.P.சிவசாமி | | ரூ:31,70,953.00 | 0.04% குறைவு |

அலுவலக குறிப்பு:-

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு.P.சிவசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) துப்புரவு பணியாளர் குடியிருப்பு அமைக்கும் பணியினை விரைந்து முடித்து பயன்படுக்கு கொண்டு வரும் பொருட்டு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.232 / 2013 /இ1)

**<u>தீர்மான எண். 643 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 08</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:34.50 லட்சம் (ரூபாய்: முப்பத்து நான்கு லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி –அல்லிநகரம் நகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்பில் Emulsion Paint, Rain water downfall pipe, PVC HDPE Tank மற்றும் Iron Paint பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்: 597 நாள்: 18-07-2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 20-08-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.C.நல்லகுரும்பன் அன் கோ, தேனி | ரூ:30,45,794.40 | ரூ:31,00,575.31 | 1.79% கூடுதல் |
| 2 | திரு.P.சிவசாமி | | ரூ:30,43,713.30 | 0.06% குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u> :-

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு.P.சிவசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) துப்புரவு பணியாளர் குடியிருப்பு அமைக்கும் பணியினை விரைந்து முடித்து பயன்படுக்கு கொண்டு வரும் பொருட்டு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.232 / 2013 /இ1)

**தீர்மான எண். 644 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 09:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:42.00 லட்சம் (ரூபாய்: நாற்பத்து இரண்டு லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்பில் மின் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்: 597 நாள்: 18-07-2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 20-08-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.C.நல்லகுரும்பன் அன் கோ, தேனி | ரூ:35,40,566.00 | ரூ:36,06,286.00 | 1.85% கூடுதல் |
| 2 | திரு.P.சிவசாமி | | ரூ:35,39,606.00 | 0.02% குறைவு |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள திரு.P.சிவசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) துப்புரவு பணியாளர் குடியிருப்பு அமைக்கும் பணியினை விரைந்து முடித்து பயன்படுக்கு கொண்டு வரும் பொருட்டு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.232 / 2013 /இ1)

**தீர்மான எண். 645 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 10:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2017-18-ம் ஆண்டு பொது நிதியின் கீழ் கிழக்கு சந்தை முதல் தளத்தில் 13 கடைகள் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | பட்டியல் விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | Express publications, (Madurai) Ltd., மதுரை. (தினமணி) | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 900/2018 செ.ம.தொ. தேனி. | பட்டியல் எண்: DGL – D18020066 நாள்: 13-02-2018 | ரூ: 15,271/- |
| | | | **மொத்தம்** | **ரூ: 15,271/-** |

மேற்கண்ட தொகை ரூ:15,271/- (ரூபாய்: பதினைந்து ஆயிரத்து இறுநூற்று எழுபத்து ஒன்று மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.163 / 2018 /இ1)

**தீர்மான எண். 646 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 11:

தேனி-அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.17 பங்கஜம் ஹவுஸ் தெரு மற்றும் வார்டு எண்.19 நரேந்திரதேவ் தெரு இடங்களில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்ட இடத்திலிருந்து புதிதாக நீழ் மூழ்கி மோட்டார் பொருத்தி அருகில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து அருகிலுள்ள தெருப்பகுதிகளுக்கு பைப் லயன் பதித்து தண்ணீர் வசதி செய்ய ரூ.3,90,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2752 / 2018 /இ2)

**தீர்மான எண். 647 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 12:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில உள்ள கீழ்கண்ட இனங்களுக்கு 3 ஆண்டு குத்தகை உரிமம் முடிவடைவதால், ஏற்கனவே வசூல் செய்த குத்தகை தொகையில் அரசாணை நிலை எண்.92 நாள் 03.07.2007-ன்படி 15% உயர்த்தி நிர்ணயம் செய்து வசூல் செய்யவும் குத்தகை உரிம காலத்தினை 3 ஆண்டு காலலததிற்கு நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண். | பெயர் | 2017-2018-ம் ஆண்டு | 15% உயர்வு | 2018-2018ம் ஆண்டு குத்தகை |
|---|---|---|---|---|---|
| 1. | 125/2015014 | M.S.திலகர் | 10600 | 1590 | 12190 |
| 2. | 125/2015023 | R.சந்திரன் | 55000 | 8250 | 63250 |
| 3, | 125/2015013 | G.கஜேந்திரன் | 7000 | 1050 | 8050 |

**அலுவலகக்குறிப்பு** :

1. மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கு அரசாணை நிலை எண்.92 நாள் 03.07.2007-ன்படி குத்தகை தொகை உயர்வு செய்து புதுப்பித்து தரப்பட வேண்டும். இந்நிலையில் அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை நாள் 03.07.2007-ன்படி மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு உயர்வு செய்ய மன்ற பொருள் வைக்கப்படுகிறது.
2. முன் அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5715/2018/அ3)

**தீர்மான எண். 648 1, 2. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 13:

தேனி - அல்லிநகரம் நகராட்சிப்பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகளை துறை மூலம் பராமரிப்பு மேற்கொள்ள தேவையான பணியாளர்கள் மட்டும் வழங்குதல் பணிக்கு ரூ. 11.00 (ரூ. பதினோரு லட்சம் மட்டும்) தனி அலுவலரின் முன் அனுமதி நாள் 28.09.2017 மேற்படி பணிக்கு 28.09.2017-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **வயர்மேன் ஒருநபர் / ஒரு மாதம்** | **ஹெல்பர் ஒரு நபர் / ஒரு மாதம்** |
|---|---|---|---|
| 1 | திரு.பி.முருகேசன் | 9,850.00 | 6,900.00 |
| 2 | திரு.எம்.முகமதுசலீம் | 10,000.00 | 7,200.00 |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.பி.முருகேசன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தெருவிளக்கு பராமரிப்பு அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3222/2018/இ2)

**<u>தீர்மான எண். 649 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 14</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வந்தது. மேற்கண்ட பராமரிப்பு பணியினை தனியார் மூலம் 30-09-2017-ம் தேதி வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டு, முடிவடையும் நிலையில், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது, தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில், வழக்கு எண்: WP(MD) No: 17271/2017-ல் KSP Electricals, தேனி நிறுவனத்தின் சார்பாக திரு.P.விஜயன் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

தற்போது தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை துறையின் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையில் இருப்பதால், தெருவிளக்குகள், பராமரிப்பிற்கு தேவையான பணியாட்களை தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு (Man Power) பணியாளர்கள் மேற்கொள்வதற்கும், மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்களின் அளவுகோல் நிர்ணயம் செய்துள்ள அரசாணை (நிலை) எண்: 70 நாள்: 05-05-1998 (ந.ப.3.) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட அரசாணையின்படி நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளின் பராமரிப்பிற்கு கீழ்காணும் பணியாட்கள் தேவைப்படுகிறது.

1) 600 தெருவிளக்குகளுக்கு - 1 மின்பணியாளர் (Wireman)
2) 600 தெருவிளக்குகளுக்கு - 1 உதவியாளர் (Helper)

அதன் பேரில், நகராட்சியில் உள்ள 2999 எண்ணிக்கை தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு

1) மின் பணியாளர் - 5 எண்ணிக்கையும்
2) உதவியாளர் - 5 எண்ணிக்கை, தேவைப்படுகிறது

தற்போது இப்பணிக்கு 5 மின் கம்பியாளர்களையும் மற்றும் 5 உதவியாளர்களையும் அமர்த்திக்கொள்வதற்கும், பணியாளர்கள் ஊதியம் நிர்ணயத்தினை மாவட்ட ஆட்சியர், தேனி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 8977/2016/இ2 நாள்: 16-05-2017 அடிப்படையில்

1) மின் பணியாளர் - ரூ:329 / 1 நபர் / நாள் ஒன்றுக்கு
2) உதவியாளர் - ரூ:231 / 1 நபர் / நாள் ஒன்றுக்கு

எனவே மேற்கண்ட பணியாளர்களின் எண்ணிக்கைக்கும், அதற்கான நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியத்தில் பணியாளர்களை, தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பெற்று, பணியினை மேற்கொள்ளவும், இப்பணியினை இம்முறையில் ஓராண்டு காலம் வரை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ: 11.00 லட்சம் (ரூபாய்: பதினொன்று லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

அ) அரசாணையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ) மேற்கண்ட செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

உ) அவசர அவசியம் தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3222/2017/இ2)

**<u>தீர்மான எண். 650 அ, ஆ, இ மற்றும் ஈ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 15</u>:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 05.06.2018-ல் சட்டப்பேரவையில் விதி 110-ன் கீழ் ஒருமுறை மட்டுமே உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை 01.01.2019-ம் தேதி முதல் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986-ன் கீழ் தடைசெய்ய உத்தரவிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.84, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (EC.2) துறை நாள் 25.06.2018-ஐ மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.4021/2017/எச்1)

**<u>தீர்மான எண். 651 பதிவு செய்யப்பட்டடது.</u>**

## <u>பொருள் 16</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தையில் ஆடுவதைகூடம் அருகே உள்ள காலியிடத்தில் நகராட்சியின் வருவாயினை பெருக்கிடும் வகையில் புதிததாக 4 கடைகள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:17.00 லட்சம் (ரூபாய்: பதினெழு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தையில் ஆடுவதைகூடம் அருகே உள்ள காலியிடத்தில் (பகுதி-2) புதிததாக 4 கடைகள் அமைத்தல் | 17.00 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 652 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 17:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தையில் ஆடுவதைகூடம் அருகே உள்ள காலியிடத்தில் நகராட்சியின் வருவாயினை பெருக்கிடும் வகையில் புதிததாக 6 கடைகள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:22.00 லட்சம் (ரூபாய்: இருபத்து இரண்டு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தையில் ஆடுவதைகூடம் அருகே உள்ள காலியிடத்தில் (பகுதி-3) புதிததாக 6 கடைகள் அமைத்தல் | 22.00 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 653 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 18:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தையில் ஆடுவதைகூடம் அருகே உள்ள காலியிடத்தில் நகராட்சியின் வருவாயினை பெருக்கிடும் வகையில் புதிததாக 2 கடைகள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:8.40 லட்சம் (ரூபாய்: எட்டு லட்சத்து நாற்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தையில் ஆடுவதைகூடம் அருகே உள்ள காலியிடத்தில் (பகுதி-1) புதிததாக 2 கடைகள் அமைத்தல் | 8.40 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 654 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 19:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 01 முதல் 17 வரை உள்ள மினிபவர் பம்புகள் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வார்டு பகுதிகளில் மினிபவர் பம்புகள் மோட்டார்கள் வாங்கி பொருத்தி ஐந்து வருடத்திற்கு மேலாகிறது. இதனால் மேற்கண்ட பழைய மோட்டார்கள் பழுது பணி பார்க்கவும் மற்றும்கூலி உள்பட மோட்டார் விலையை விடகூடுதல் செலவினம் ஆகிறது. எனவே மேற்கண்ட வார்டு பகுதிகளில் தண்ணீர் தேவை அத்தியாவசியம் கருதி மேற்கண்ட வார்டு பகுதிகளுக்கு புதிதாக ஐந்து எண்ணம் கொண்ட மோட்டார்கள் வாங்கி பொருத்துவதற்கும், அதற்கான உ உ ததேசச் செலவினம் ரூ.1,80,000/- (ரூபாய். ஒரு இலட்சத்து என்பதினாயிரம் மட்டும்) ற்றம் மன்றத்தின் அனுமதி வேண்டப்ப்டுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும். (ந.க.எண். /2018/இ2)

**தீர்மான எண். 655 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 20:

தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்: 12 காந்தி நகரில் உள்ள குறிஞ்சி நகர் பிரதான சாலையில் சுமார் 70 மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் பிரதான குழாய் பதிக்க வேண்டியது அவசிமானதாகும். எனவே வார்டு எண்: 12 காந்தி நகரில் உள்ள குறிஞ்சி நகர் பிரதான சாலையில் பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:1.20 லட்சம் (ரூபாய்: ஐந்து லட்சத்து எழுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 12 காந்தி நகரில் உள்ள குறிஞ்சி நகர் பிரதான சாலையில் பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைத்தல் | 1.20 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 656 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 21</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்: 27 பாரஸ்ட் சாலை 4, 5 மற்றும் 6வது குறுக்குத் தெருக்களில் பாதாள சாக்கடை திட்டத்தினை முழுமையாக செயல்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு 150 மீட்டர் நீளத்திற்கு கழிவுநீர் பிரதான குழாய் பதிக்க வேண்டியது அவசிமானதாகும். எனவே வார்டு எண்: 27 பாரஸ்ட் சாலை 4, 5 மற்றும் 6வது

குறுக்குத் தெருக்களில் பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:5.75 லட்சம் (ரூபாய்: ஐந்து லட்சத்து எழுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 27 பாரஸ்ட் சாலை 4, 5 மற்றும் 6வது குறுக்குத் தெருக்களில் பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைத்தல் | 5.75 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**<u>தீர்மான எண். 657 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 22</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பதிவறையில் பதிவுகளை பாதுகாப்பாக பராமரித்திடும் பொருட்டு Steel Rack அமைக்க வேண்டியது இன்றியமையானதாக உள்ளது. எனவே நகராட்சி அலுவலக பதிவறையில் Steel Rack அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:5.55 லட்சம் (ரூபாய்: ஐந்து லட்சத்து ஐம்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக பதிவறையில் Steel Rack அமைத்தல் | 5.55 |

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**<u>தீர்மான எண். 658 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 23:

தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அவ்வப்போது அகற்றிடும் பொருட்டு அதற்கு தேவையான JCB வாகனம் மற்றும் அகற்பப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்திட தேவையான டிராக்டர் வாகனங்களை உள்ளூர் நிறுவனங்கள் மூலம் வாடகை அடிப்படையில் பெற்று பயன்படுத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:1.75 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சத்து எழுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 659 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 24:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் திட்ட இடைவெளி நிரப்பு நிதி 2015-16 மற்றம் 2016-17-ன் கீழ் முன்னேற்றத்தில் உள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி தொடர்பான தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஆய்வறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

It is instructed to Municipal Engineer that the work which is not covered in the sanctioned estimate shall be arrived out by the way of calling fresh tender as it should be technically sanctioned by the competent authority.

The item of work which already sanctioned and if any deviation arised during execution necessary reason shall be furnished during submission of completion report.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.232/2013/இ1)

**தீர்மான எண். 660 அ. பதிவு செய்யப்பட்டது.**

## பொருள் 25:

தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:01 கிருஷ்ணன் கோயில் தெருவில் உள்ள நகராட்சி பொது நூலக கட்டடத்தினை பராமரிப்பு மேற்கொள்ள வேண்டியது இன்றியமைடயானதாக உள்ளது. எனவே வார்டு எண்:01 கிருஷ்ணன் கோயில் தெருவில் உள்ள நகராட்சி பொது நூலக கட்டடத்தினை பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்கான

உத்தேச மதிப்பீடு ரூ:30,000/- (ரூபாய்: முப்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (தொகை ரூபாய்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்:01 கிருஷ்ணன் கோயில் தெருவில் உள்ள நகராட்சி பொது நூலக கட்டடத்தினை பராமரிப்பு மேற்கொள்ளுதல் | ரூ:30,000/- |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 661 அ, ஆ.அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 26:

தேனி—அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிபட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கட்டிடங்கள் பராமரிப்பு இன்றி பழுதடைந்த நிலையில் உள்ளதை பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், அதன் சுற்றுச்சுவர், இயல் நீரேற்று நிலையம்,புதிய பம்பு அறைகளில் பழுதான மேற்கூரை, கதவு மற்றும் ஜன்னல்கள் பழுத சரிசெய்தல் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. **9.00** இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண். **1615** நாள். **20.06.2016** ன் படி நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நகராட்சி ஒப்பந்ததாரர் திரு. டி. தவமணி அவர்களுக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். **1662.** நாள்.**19.08.2016** ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

அதன்படி மேற்கண்ட பராமரிப்பு பணிகள் நடைபெற்று வரும்நிலையில் நீர்பணி பார்வையாளர் அவர்களின் **03.09.2018** ம் தேதிய குறிப்புரையில் தற்சமயம் வயரிங்,மின் விளக்குகள் பொருத்தும் பணி மற்றும் பூச்சுபணி நடைபெற்று வருவதாகவும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதலாக ரூ **95000/.** செலவினம் வர வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும், அதற்கானகூடுதல் செலவினம் ரூ.**95000/.** ( ரூ தொன்னூற்றி ஐந்தாயிரம் மட்டும்) ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட கூடுதல் செலவினத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண். 2489 /2014/இ2)

**தீர்மான எண். 662 அ, ஆ.அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 27</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 01 பள்ளி ஒடைத்தெருவில் உள்ள மினி பவர் பம்பின் சின்டெக்ஸ் டேங்கை மாற்றி அமைக்கவும், வடக்கு மெயின் தெருவில் உள்ள கழிப்பறைக்கு இரண்டு எண்ணம் பிவிசி டேங்க் அமைக்கவும், வெள்ளைச்சாமி தெருவில் உள்ள கைப்பம்பை அகற்றி மினி பவர் அமைக்கவும், பஜார் தெருவில் உள்ள மினி பவர் பம்புக்கு சின்டெக்ஸ் டேங்க் அமைக்கவும் ,மற்றும் வார்டு எண்.03 ஒண்டிவீரன் காலனியில் உள்ள கழிப்பறையில் புதிதாக 2 HP மோட்டார், பேனல் போர்டு, ஒஸ் பொருத்தவும் மற்றும் அதற்கானஉத்தேசச்செலவினம் ரூ.2.40 இலட்சம் ( ரூ இரண்டு இலட்சத்து நாற்பதினயிரம் மட்டும்) ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். /2018/இ2)

**<u>தீர்மான எண். 663 அ, ஆ..அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 28</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.12 பாத்திமாதியேட்டர் தெருவிற்கு அருகில் உள்ள தெருவில் சுமார் 110 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு அத்தியாவசியாமாக உள்ள தண்ணீர் போது மானதாக இல்லை என அப்பகுதி மக்கள் நீண்ட நாளாக கோரியுள்ளனர். மேலும் வார்டு 12 குறிஞ்சி நகர் 5 வது தெருவிற்கு அருகில் உள்ள தெருவில் சுமார் 200 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு அத்தியாவசியாமாக உள்ள தண்ணீர் போது மானதாக இல்லை என அப்பகுதி மக்கள் நீண்ட நாளாக கோரியுள்ளனர். எனவே அப்பகுதி நலனை கருத்தில் கொண்டு பாத்திமாதியேட்டர் தெருவில் உள்ளமினி பவர் பம்ப் பிவிசி டேங்கில் இல் இருந்து அதன் அருகில் உள்ள தெருவிற்கு தண்ணீர் செல்ல ஏதுவாக பைப்லைன் பதித்து தண்ணீர் வசதி ஏற்படுத்தி தரவும், மற்றும் குறிஞ்சிநகர் மெயின் தெருவில் உள்ள மினி பவர் பம்ப் பிவிசி டேங்கில் இல் இருந்து அதன் அருகில் உள்ள தெருவிற்கு தண்ணீர் செல்ல ஏதுவாக பைப்லைன் பதித்து தண்ணீர் வசதி ஏற்படுத்தி தரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 95000/. ( ரூ தொன்னூற்றி ஐந்தாயிரம் மட்டும்) ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண். /2018/இ2)

**<u>தீர்மான எண். 664 அ, ஆ..அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 29</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் ரூ:68.83 கோடி மதிப்பீட்டில் வைகை அணையினை நீராதராமாக கொண்டு புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் முன்னேற்றத்தில் உள்ளது. மேற்கண்ட திட்டத்தில் சீரான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்திடும் வகையில் Supervisory Control and Data Acquistion (SCADA) அமைப்பு ஏற்படுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 12-02-2018 தேதிய ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தேனி – அல்லிநகரம் நகராட்சியில் நடைபெற்று வரும் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் Supervisory Control and Data Acquistion (SCADA) அமைப்பினை ஏற்படுத்திட மதிப்பீட்டு தொகை ரூ:25,71,616/- எனவும், மேலும் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரம் மூலம் இலவசமாக பராமரிப்பு மற்றும் நான்கு ஆண்டுகளுக்கு ஒப்பந்தாரர் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள நகராட்சியால் தொகை செலுத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தேனி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) புதிய குடிநீர் திட்டத்தில் அமைப்பு ஏற்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட தொகையினை அரசு நிர்ணயிக்கும் நிதிப்பகிர்வில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) மேற்கண்ட பணிக்கான நகராட்சி பங்களிப்பு தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5291 /2018 / இ1)**

**<u>தீர்மான எண். 665 அ. பதிவு செய்யப்பட்டது. ஆ, மற்றும் ஈ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 30</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு-1 பொம்மயகவுண்டன்பட்டியில் அமைநதுள்ள நகராட்சி பயனியர் விடுதி வளாகத்தில் ரூ: 1.60 லட்சம் மதிப்பீட்டில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வைப்பதற்கு கூடம் (Segregaion Shed) அமைத்திட நகர்மன்ற தீர்மானம் எண்: 402 நாள்: 12-01-2018

நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.எம்.தர்மர் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பணி மேற்கொள்ளும் நிலையில் மேற்கண்ட பகுதியில் சேகரமாகும் திடக்கழிவின் அளவினை கருத்தில் கொண்டு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரிக்கும் பணியினை முழுமையாக மேற்கொள்ள வேண்டயதன் அவசியம் கருதி கூடத்தினை (Segregation Shed) விரிவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியம் கருதி கூடுதல்தொகை ரூ:23,365/- கூடுதல் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான திருத்திய மதிப்பீடு ரூ:1,83,365/- (ரூபாய்: ஒரு லட்சத்து என்பத்து மூன்று ஆயிரத்து முன்னூற்று அறுபத்து ஐந்து மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) | திருத்திய மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு–1பொம்மயகவுண்டன்பட்டியில் அமைந்துள்ள நகராட்சி பயனியர் விடுதியில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வைப்பற்கு கூடம் (Segregation Shed) அமைத்தல் | 1.60 | ரூ:1,83,365.00 |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) பணியினை முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு கூடுதல் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 121 /2018 / இ1)**

**<u>தீர்மான எண். 666 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 31</u>:

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவு வாகன எண்.T.N.60A 7724 -க்கு வாகன தகுதி சான்று முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதாற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து தருவதற்கு 22.05.2018-ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் கேள்வி விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | டி.வி.சுந்தரம் ஐயங்கார்அன்ட் சன்ஸ் விரைவேட் லிமிட்டெட்., தேனி பெரியகுளம் மெயின்ரோடு, மதுராபுரி, தேனி. | 84,355/- |

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மேற்படி பணிக்கு ஒற்றை ஒப்பந்தப்புள்ளி கோரிய டி.வி.சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் விரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் தொகையினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்று பழுது பார்ப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்தில் பழுது பணி மேற்கொள்ளுவதற்கு வேலை உ த்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.604/2018/எச்1)

**<u>தீர்மான எண். 667 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 32</u>:

இந்நகராட்சியில் நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்ய வேண்டி திரு.M.ஜெயக்குமதார், B.S.,BL., என்பவர் விண்ணப்பம் வழங்கியுள்ளார். அன்னாருக்கு தேனி மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 19 ஆண்டுகளாக சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளில் ஆஜரான அனுபவம் உள்ளதால் நகராட்யசி சம்மந்தப்பட்ட வழக்குகளில் ஆஜராக விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். அன்னாரின் விருப்ப விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

பதிவு செய்யலாம். (ந.க.எண்.10458/2007/எப்1)

**<u>தீர்மான எண். 668 பதிவு செய்யப்பட்டது.</u>**

## <u>பொருள் 33</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தற்போத மழைக்காலம் துவங்க உள்ளதால் பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டும், தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் நகர் பகுதியில் உள்ள பிரதான கால்வாய்களை தூர்வாரிடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:1.65 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சத்து அறுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**<u>தீர்மான எண். 669 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 34</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் உள் மற்றும் வெளி பணியாளர்களின் வருகையினை கண்காணித்திடும் பொருட்டு நகராட்சி அலுவலகம் மற்றும் 5 பொது சுகாதார பிரிவு அலுவலகங்களில் Biometric வருகைபதிவேடு அமைப்பு மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:4.00 லட்சம் (ரூபாய்: நான்கு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சியில் உள் மற்றும் வெளி பணியாளர்களின் வருகையினை கண்காணித்திடும் பொருட்டு நகராட்சி அலுவலகம் மற்றும் 5 பொது சுகாதார பிரிவு அலுவலகங்களில் Biometric வருகைபதிவேடு அமைப்பு மேற்கொள்ளுதல் | 4.00 |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2400 /2018/இ1)

**<u>தீர்மான எண். 670 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 35</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பைகள் உப்பார்பட்டி உரக்கிடங்கில் குவிக்கப்பட்டுள்ளது. மேற்படி குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்து எடுக்கும் பொருட்டு JCB மற்றும் HItachi வாகனத்தினை பயன்படுத்திட பொது சுகாதார பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சிக்கு சொந்தமான JCB வாகனம் எண்: TN60 A 7466 வாகனம் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்திடும் பொருட்டு மேற்கண்ட குப்பபைகளை தனியார் நிறுவனங்கள் மூலம் JCB மற்றும் HItachi வாகனத்தினை பயன்படுத்தி அப்புறப்படுத்திடவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:9.50 லட்சம் (ரூபாய்: ஒன்பது லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**<u>தீர்மான எண். 677 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 36:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தற்போது அனைத்து பணிகளும் கணினிமயமாக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுவதால் கூடுதலாக 2 எண்ணம் பிரிண்டர் வாங்குவது இன்றியமையானதாக உள்ளது. எனவே தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கூடுதலாக இரண்டு எண்ணம் பிரிண்டர் வாங்கிடவும் உத்தேச மதிப்பீடு ரூ:1.00 லட்சம் (ரூபாய்: ஒரு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கூடுதலாக இரண்டு எண்ணம் பிரிண்டர் வாங்குதல் | 1.00 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 672 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 37:

தேனி – அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலைய அணுகு சாலை, பேருந்து நிலைய வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள LED விளக்குகள் மற்றும் வார்டு எண்:23, 29, 30, 31 மற்றும் 32 ஆகிய பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள LED விளக்குகள் அடிக்கடி பழுதடைவதால் பொது மக்கள் மற்றும் வாகன போக்குவரத்திற்கு மிகுந்த இடற்பாடு ஏற்படுகிறது. மேலும் நகரில் உள்ள அனைத்து தெருவிளக்குளும் ஒளிர்வதை உறுதி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள LED விளக்குகள் மற்றும் அதற்கு தேவையான கேபிள்களை பழுது மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:2.00 லட்சம் (ரூபாய்: இரண்டு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ: இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலைய அணுகு சாலை, பேருந்து நிலைய வளாகம் மற்றும் வார்டு எண்:23, 29, 30, 31 மற்றும் 32 ஆகிய பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள LED விளக்குகள் மற்றும் கேபிள்கள் பழுது மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல் | 2.00 |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 673 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 38:

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் உள்ள 32 எண்ணிக்கை குளிர்சாதன பெட்டிகள் முறையான இயக்கத்திற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். எனவே 01-09-2018 முதல் ஓராண்டு காலத்திற்கு குளிர்சாதன பெட்டிகளை பழுது மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:1,05,000/- (ரூபாய்: ஒரு லட்சத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 674 1, 2. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 39:

தேனி - அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து தெருவிளக்குகள் பராமரிப்பு பணியினை தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வந்தது. மேற்கண்ட பராமரிப்பு பணியினை தனியார் மூலம் 30-09-2017-ம் தேதி வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டு, முடிவடையும் நிலையில், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில், வழக்கு எண்: WP(MD) No: 17271/2017-ல் KSP Electricals, தேனி நிறுவனத்தின் சார்பாக திரு.P.விஜயன் என்பவரால் வழக்கு தொடரப்பட்டது. அதனை தொடர்ந்து தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகனின் பராமரிப்பினை ஓராண்டு காலத்திற்கு தனியார் பணியாளர்கள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்: நாள்: அனுமதிக்கப்பட்டது.

தற்போது மீண்டும் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில், வழக்கு எண்: WP(MD) No: 17577/2018-ல் KSP Electricals, தேனி நிறுவனத்தின் சார்பாக திரு.P.விஜயன் என்பவரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

எனவே தேனி – அல்லிநகரம் நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை துறையின் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையில் இருப்பதால், தெருவிளக்குகள், பராமரிப்பிற்கு தேவையான பணியாட்களை தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு (Man Power) பணியாளர்கள் மேற்கொள்வதற்கும், மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்களின் அளவுகோல் நிர்ணயம் செய்துள்ள அரசாணை (நிலை) எண்: 70 நாள்: 05-05-1998 (ந.ப.3.) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட அரசாணையின்படி நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளின் பராமரிப்பிற்கு கீழ்காணும் பணியாட்கள் தேவைப்படுகிறது.

3) 600 தெருவிளக்குகளுக்கு - 1 மின்பணியாளர் (Wireman)

4) 600 தெருவிளக்குகளுக்கு - 1 உதவியாளர் (Helper)

அதன் பேரில், நகராட்சியில் உள்ள 3325 எண்ணிக்கை தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு

3) மின் பணியாளர் - 6 எண்ணிக்கையும்

4) உதவியாளர் - 6 எண்ணிக்கை, தேவைப்படுகிறது

தற்போது இப்பணிக்கு 6 மின் கம்பியாளர்களையும் மற்றும் 6 உதவியாளர்களையும் அமர்த்திக்கொள்வதற்கும், பணியாளர்கள் ஊதியம் நிர்ணயத்தினை மாவட்ட ஆட்சியர், தேனி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 8977/2016/இ2 நாள்: 11-06-2018 அடிப்படையில்

3) மின் பணியாளர் - ரூ:337 / 1 நபர் / நாள் ஒன்றுக்கு

4) உதவியாளர் - ரூ:237 / 1 நபர் / நாள் ஒன்றுக்கு

எனவே மேற்கண்ட பணியாளர்களின் எண்ணிக்கைக்கும், அதற்கான நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியத்தில் பணியாளர்களை, தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பெற்று, பணியினை மேற்கொள்ளவும், இப்பணியினை இம்முறையில் ஓராண்டு காலம் வரை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ: 12.40 லட்சம் (ரூபாய்: பனிரெண்டு லட்சத்து நாற்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

அ) அரசாணையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ) மேற்கண்ட செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2018/இ1)

**<u>தீர்மான எண். 675 அ, ஆ, இ மற்றும் ஈ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 40:

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் உள்ள மின்இயற்றியின் முறையான இயக்கத்திற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். எனவே 01-09-2018 முதல் ஓராண்டு காலத்திற்கு மின்இயற்றியினை பழுது மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ:75,000/- (ரூபாய்: எழுபத்து ஐந்து ஆயிரம் மட்டும்) மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 676 1, 2. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 41:

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல், அதனால் ஏற்படும் சுகாதார சீர்கேடு, திடக்கழிவுகளை குறைத்திடும் வழிமுறைகள், திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்தல் மற்றும் மீண்டும் பயன்படுத்துதல் போன்ற விழப்புணர்வு பணிகளுக்காக SBM மேற்பார்வையாளர்கள் 2 நபர்கள் மற்றும் பரப்புரையாளர்கள் 8 நபர்கள் வீதம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26458 / 2016 / தி1 – 2, நாள்.29.05.2017–ன்படி நியமனம் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணியாளர்களுக்கு மார்ச் 2018 முதல் ஆகஸ்ட் 2018 மாதம் வரையிலான மாதங்களுக்கு ஊதியத்தொகை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 2896 / 2017 / பி2, நாள். 03.04.2018 மற்றும் 13.04.2018–ன் மூலம் விடுவிக்கபபட்டு ஊதியம் வழங்கப்பட்டது.

மேற்படி பணியாளர்களுக்கான ஒப்பந்தகாலம் 30.09.2018 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 26458 – 1 / 2016 / தி1, நாள்.31.07.2018-ன்படி பணிக்காலம் 31.12.2018 முடிய ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்தும், அப்பணியாளர்களுக்கான ஊதியத்தொகையினை அந்தந்த உள்ளாட்சி அமைப்பின் பொதுதியிலிருந்து வழங்கவும் அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி SBM மேற்பார்வையாளர்கள், மற்றும் பரப்புரையாளர்களுக்கான ஊதியத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.139994/- வீதம் 3 மாதங்களுக்கு ரூ 419982/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிந்து மேற்கொள்ளலாம். **(ந.க.எண்.1939/2017/எச்1)**

**தீர்மான எண். 677 1, 2. அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி.